# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

50

## இந்திய விஸ்தரிப்பு வாதமும் JVP யின் சந்தர்ப்பவாதமும்

இந்திய விஸ்தரிப்பு வாதம் தொடர்பாக JVP யினர் பார்த்த பார்வை - மார்க்சிச லெனினிச மாவோஇச சித்தாந்த அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு புரட்சிகர விடுதலை இயக்கத்திற்குரிய பார்வையாக இருக்கவில்லை. மாறாக பௌத்த மதத்திற்கும், சிங்கள இனவாதத்திற்கும் முன்னுரிமை கொடுத்த ஒரு சிங்கள தேசிய முதலாளித்துவ இயக்கத்தினுடைய பார்வையாகவே அது இருந்தது.

பிரபல சிங்கள இடதுசாரி அறிஞரும், அரசியல் ஆய்வாளருமான குமாரி ஜெயவர்த்தனா இலங்கையின் இன வர்க்க முரண்பாடுகள் என்ற தனது நூலில் இந்திய விஸ்தரிப்பு வாதம் தொடர்பாக ஜே.வி.பியினர் பார்த்த பார்வையை பின்வரும் 4 அம்சங்களில் அடக்குகின்றார்.

I. இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இந்திய முதலீடுகள் தனியுரிமையும் ஆதிக்கமும் கொண்டுள்ளன. இந்திய முதலாளிகள் தங்களுடைய தளங்களை இந்தியாவில் வைத்துக் கொண்டு, இலங்கையைச் சுரண்டிக்கொண்டு சென்று இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றார்கள்.



II. இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஊறு செய்யும் வகையில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பெரிய அளவுக்கு கடத்தல் நடைபெறுகின்றது. பெரும்பாலும் மேற்குறிப்பிட்ட முதலாளிகளே கடத்தல்காரர்களாகவும் இருக்கின்றார்கள்.

III. எல்லா இடங்களிலும் (உலகெங்கும்) உள்ள சகல தமிழர்களையும், ஒன்றுபடுத்தும் நோக்குடைய தென்னிந்திய 'நாம் தமிழர்' இயக்கத்தின் விரிவாக்கமே சமஷ்டிக் கட்சி (தமிழரசுக்கட்சி) யாகும். இதனால் இவர்கள் ஐந்தாம் படையினராகவும் அந்நிய அதிகாரத்தின் முகவர்களாகவும் பார்க்கப்படவேண்டும்.

IV. (தமிழ் நாட்டிலிருந்து வரும்) திரைப்படங்கள் சஞ்சிகைகள், இசைத்தட்டுகள் மூலம் இலங்கையில் கலாச்சார ஊடுருவல் இடம்பெறுகின்றது. இது இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு அம்சமாகும். இலங்கையில் உள்ள சகல தமிழர்களும் எம்.ஜி.ஆரை ஒரு வீர புருசனாக எண்ணுகின்றனர்.

இந்தியாவில் சொத்துக்களையும், முதலீடுகளையும் வைத்துக் கொண்டு இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்திய முதலாளிகளோடு மலையகத் தமிழ் மக்களையும் ஒப்பிட்டு, அவர்களும் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் பங்காளர்கள் என்று JVP அமைப்பு மேற்கொண்ட பிரச்சாரம். 'அதற்கு வர்க்கப் பார்வையே கிடையாது. அது ஒரு அப்பட்டமான சிங்கள தேசிய முதலாளித்துவ இயக்கம்' என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தது.

'தேசிய சிறுபான்மையினரில் தங்கியிருக்கும் எந்தப் புரட்சிகர இயக்கமும் வெற்றிபெற முடியாது' என்று 1970-களில் வாதிட்ட ரோகண விஜயவீரா, அதற்கு உதாரணமாக குர்திஷ் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த் ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி, ஈராக்கின் 'பாத்' கட்சியால் தோற்கடிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியிருந்தார்.

J.V.P யினுடைய அரசியல் வகுப்புக்களில் மலையகத் தமிழர்கள் இலங்கையின் செழிப்பான பகுதிகளில் வாழ்கின்றனர் எனவும், கல்வி சுகாதார வசதிகளில் கூட சாதாரண சிங்கள மக்களை விட அதிக வசதிகளையும் சலுகைகளையும் அனுபவிக்கின்றனர் எனவும் பிரச்சாரப்படுத்தப்பட்டது. இந்தப் பிரச்சாரம் தீவிர பௌத்த சிங்கள இனவாதிகளான அநகாரிக தர்மபாலாவிலிருந்து A.E முனசிங்கா முதலியவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஒன்றுதான்.

'மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஜேவி.பி. யினருடைய இனவாதப்போக்கு பெருந்தோட்டத் தொழிற்துறையையும் அதனோடு இணைந்த தொழிற்துறைகளையும் பாதிக்கச் செய்துவிடும்' என்று, பிரித்தானிய மற்றும் உள்ளூர் முதலாளிகள் அப்போது பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்காவுக்கு ஆலோசனை கூறியிருந்தனர். இதனடிப்படையில் J.V.P யின் முக்கியமான பிராந்தியத் தலைவர்கள் சிலரை ஐக்கிய தேசியக் கட்சி அரசு கைது செய்து சிறையில் அடைத்திருந்தது.

ஆனால் அந்தக் கைதுகள் JVP யினுடைய வளர்ச்சியை எந்த விதத்திலும் தடுத்து விடவில்லை. அந்தக் காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த 'சிவப்பு புரட்சி' பற்றிய சிந்தனையின் தாக்கம் இலங்கையிலும் பிரதிபலித்திருந்தது. அதிலும் JVP இயக்கம், சிங்கள தேசிய வாதத்திற்கு மார்க்சிச லெனினிச முலாம் பூசி பிரச்சாரப் படுத்திய போது அதிகளவு சிங்கள இளைஞர்கள் குறிப்பாக பல்கலைக் கழக மாணவர்கள், கல்லூரிகளின் உயர்வகுப்பு மாணவர்கள் அந்த இயக்கத்தில் இணைந்து கொண்டார்கள்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் குறிப்பாக சிறீலங்காவில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் ஒரே நேரத்தில் தாக்கி அழிப்பதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று இந்த இளைஞர்களுக்கு சொல்லப்பட்டது.

தென்பகுதியிலிருந்த சிங்கராஜா காட்டிலும் மற்றும் கேகாலை மாவட்டத்திலிருந்து மலைப் பகுதிக்காடுகளிலும் புரட்சியாளர்களுக்கு சிறு ரக ஆயுதங்கள் மற்றும் நாட்டுத் துப்பாக்கி (கட்டுத்துவக்கு), நாட்டு வெடிகுண்டுகள் என்பவற்றை பயன் படுத்துவதற்கும், தயாரிப்பதற்கும் பயிற்சி கொடுக்கப்பட்டது. இப் பகுதிகளில் இவற்றை தயாரிப்பதற்கான சிறிய தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

1970-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் JVP இயக்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தது. இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்குவந்த சுதந்திரக் கட்சி இதற்குப் பிரதி உபகாரமாக சிறையில் இருந்த JVP தலைவர்களை விடுதலை செய்தது.

1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி அதிகாலை 2 மணிக்கு வடக்கு கிழக்கு தவிர்ந்த இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள பொலிஸ் நிலையங்களைத் தாக்குவது என்று 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி JVP தலைமைப்பீடம் முடிவுசெய்தது.

இந்த முடிவு மிக இரகசியமாக வைக்கப்பட்டபோதிலும் புரட்சிக்கான தயாரிப்புக்கள் செய்யப்பட்டு வருவதாக JVP யின் கீழ் மட்டங்களில் இருந்து கசிந்த தகவல்களின் அடிப்படையில் புரட்சி நடத்த திட்டமிட்ட 1971 ஏப்ரல் 5-ம் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்பே அரசாங்கம் ரோகண விஜயவீராவை கைது செய்து சிறையில் அடைத்துவிட்டது.

### புரட்சிக்கு திகதி குறிக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட ரோகணவிஜயவீரா

**- நக்கீரன்**

# 26 தமிழர்களின் உயிர் காக்கவும், நீதியை நிலைநாட்டவும் நிதி வழங்க கோரிக்கை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 26 பேரின் உயிரைக் காப்பாற்றுவதற்கும் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ள அவர்களது வழக்கை நடத்துவதற்கும் '26 தமிழர்களின் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழு என்ற அமைப்பு, நிதி திரட்டி வருகின்றது.

இது தொடர்பாக அவ் அமைப்பின் சார்பில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்த வேண்டுகோள் வருமாறு.

## 26 தமிழர்கள் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழு வேண்டுகோள்

★ ராஜீவ் கொலை வழக்கில் பல உண்மைகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டன.

★ இரகசிய விசாரணை என்ற பெயரில் எல்லாமே மூடு மந்திரமாக நடத்தப்பட்டன.

★ குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாட முன்வந்த வழக்கறிஞர்கள் மிரட்டப்பட்டனர்.

★ சாட்சிகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

★ ஜெயின் கமிஷன் விசாரணையில் வெளிவந்த பல புதிய உண்மைகளை சி.பி.ஐ யின் சிறப்புப்புலன் விசாரணைக் குழு கணக்கிலேயே எடுத்துக்கொள்ளவில்லை.

★ கொலையின் அந்நிய சக்திகளுக்கு உள்ள பங்குபற்றி சி.பி.ஐ புலன்விசாரணை நடத்தவேயில்லை.

★ கேலிக்கூத்தாக நடத்தப்பட்ட இவ்வழக்கு விசாரணையின் முடிவில் குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய நீதித்துறையின் வரலாற்றிலேயே இவ்வளவு பேருக்குத் தூக்குத் தண்டனை இதுவரை விதிக்கப்பட்டதேயில்லை.

அதிலும் இந்தியா சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகளில் பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதே இல்லை. முதன் முறையாக 5 பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டுள்ள 26 தமிழர்களின் உயிர்களைக் காக்கவும் நீதியை நிலைநிறுத்தவும் இந்திய உச்ச நீதிமன்றத்தில், மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மூத்த வழக்கறிஞர்களைக்கொண்டு இந்த வழக்கை நடத்தவும், அதற்குத் தேவையான நிதியைத் திரட்டவும் அனைத்துத் தமிழர் அமைப்புகள், கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட கீழ்க்கண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

புரவலராக ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும், தலைவராக பழ.நெடுமாறன், துணைத்தலைவர்களாக கரூர்.பி.ஆர் குப்புசாமி, கார்முகில், ச. மெல்கியோர், ப.சண்முகசுந்தரம், ஆனூர் ஜெகதீசன், நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி, நாத்திகம் இராமசாமி, புதுவை அழகிரி, நாமக்கல் என்.பி. இராமசாமி.

செயலாளர்களாக பெ.மணியரசன், தியாகு, பேரா.ப.கல்யாணி, பொருளாளராக முனைவர். சுப. வீரபாண்டியன் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட பொதுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

நீதியை நிலைநிறுத்துவதற்கான பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. அந்தக் கடமையைத் தாமதமின்றி உடனே செய்யுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

மரணவாயிலில் நிறுத்தப்பட்டிருக்கும் நமது சகோதரத் தமிழர்களைக் காக்க அள்ளி வழங்குங்கள். நீதியை நிலை நிறுத்த உதவுங்கள்.

**நிதி அளிக்க வேண்டிய முகவரி:**
தலைவர்,
'தமிழர் நிதி'
17-1 நரசிம்மபுரம்,
மயிலை, சென்னை 600 004.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)

சென்னை-4
நாள்: 21-02-98

குறிப்பு: காசோலை, வரைவோலை ஆகியவற்றில்
**தலைவர், தமிழர் நிதி என்றே குறிப்பிட வேண்டுகிறோம்.**